NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p6
**Date:** 3 November 2021

# தர்மன்: பொருளியல் பிளவுபட்டால் உலகிற்கு பாதிப்பு

உலகப் பொருளியல் எதிர் எதிர் தரப்புகளாகப் பிரிந்தால் உலகிற்குப் பாதிப்பு என்று மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்னம் தெரிவித்தார். சிறந்த முறையில் இடர்களைச் சமாளிக்கும் வகையில் பொருள், சேவை விநியோக ஏற்பாடுகளைப் பன்மயப்படுத்துவது சாத்தியமானது என்று தான் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

திறந்த பொருளியலாகத் தொடர்ந்து இருந்து நல்ல வேலைகளை உருவாக்க இயலும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளையில், வர்த்தக, தொழில்நுட்பத்தில் உலகம் போட்டி தரப்புகளாகப் பிரிவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் திரு தர்மன் கூறினார். உலகப் பொருளியல் பிளவுபட்டால் உலகிற்குப் பாதிப்பு ஏற்படும் என்றார் திரு தர்மன்.

அமெரிக்காவின் வர்த்தக அமைச்சர் திருவாட்டி கினா ராய்மொண்டோவும் திரு தர்மனும் மெய்நிகர் ரீதியில் கலந்துரையாடினர். லீ குவான் இயூ பொதுக் கொள்கைப் பள்ளியும் அனைத்துலக பொருளியலுக்கான பீட்டர்சன் பயிலகம் என்ற அமெரிக்காவின் அறிவு ஜீவிகள் அமைப்பும் ஏற்பாடு செய்த அந்தக் கலந்துரையாடல் நவம்பர் 1ஆம் தேதி நடந்தது.

மூத்த அமைச்சருடன் பலவற்றையும் பற்றி உரையாடிய திருவாட்டி ராய்மொண்டோ, சீனாவின் வர்த்தக நடைமுறைகளில் நம்பிக்கை இல்லாத போக்கை அமெரிக்கா கைக்கொள்வதைப் பற்றி எடுத்துக் கூறினார்.

அமெரிக்க அதிபர் பைடனின் இலக்கான இந்தோ-பசிஃபிக் பொருளியல் ஏற்பாட்டை பற்றி அவர் விளக்கினார். இந்த ஏற்பாடு, அந்த வட்டாரத்தைச் சேர்ந்த ஒரே சிந்தனை உள்ள, நம்பிக்கைக்குப் பாத்திரமான பங்காளிகளை ஒருங்கே கொணரும் என்றாரவர். அமெரிக்காவின் கொள்கை இந்தோ-பசிஃபிக் வட்டாரம் பக்கம் திரும்புவதை, 'நண்பருக்கு உதவிக்கரம்' என்று அவர் வர்ணித்தார்.

பொருள், சேவை விநியோக ஏற்பாடு பற்றி உலகப் பெரும் நிறுவனங்களும் நடுத்தர அளவு நிறுவனங்களும் சிந்திக்கும் முறையில் கொவிட்-19 காரணமாக ஒரு மாற்றம் ஏற்பட்டு உள்ளதாகக் குறிப்பிட்டார் திரு தர்மன்.

அந்தக் கண்ணோட்ட மாற்றம் உலகமயத்தில் இருந்து பின்வாங்குவதல்ல என்றும் பொருள், சேவை விநியோக ஏற்பாட்டை பன்மயப்படுத்தி இடர்களைச் சிறந்த முறையில் சமாளிப்பதே என்றும் திரு தர்மன் கூறினார்.

ஆசியான் நாடுகளும் இதர வளரும் நாடுகளும் இத்தகைய பன்மய விநியோக, உற்பத்தி, தளவாடப் போக்குவரத்து ஏற்பாட்டின் அங்கமாக இருக்கும் என்று திரு தர்மன் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.